NUS
National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p4
**Date:** 27 September 2018

# பல்கலைக்கழகங்களின் புதிய தரவரிசை முறை

பல்கலைக்கழகங்கள் சமுதாயத்தின்மீது ஏற்படுத்தும் பரவலான அளவு தாக்கத்தை மதிப்பிடும் புதிய உலகளாவிய தரவரிசைப் பட்டியல் முறை அடுத்தாண்டு வெளியிடப்படும் என்று நேற்று நடைபெற்ற 'த டைம்ஸ்' உயர் கல்வி உலகக் கல்விசார் மாநாட்டின்போது கல்வி அமைச்சர் ஓங் யி காங் அறிவித்தார். பட்டதாரிகள் பெறும் வேலைகளின் தரம், பொருளியல் வளர்ச்சிக்கும் புத்தாக்கத்திற்கும் அவர்களின் பங்களிப்பு, அவர்கள் ஏற்படுத்திக்கொள்ளும் உலகளவிலான உறவுகள் அடிப்படையில் இப்புது பட்டியல் முறை அமைக்கப்படும்.

இப்புது பட்டியல் வழி பல்கலைக்கழகங்கள் சமுதாயத்தின்மீது ஏற்படுத்தும் தாக்கம் குறித்த ஒரு விரிவான மதிப்பீடு கிடைக்கும் என்பது நோக்கம். ஒரு நிறுவனத்தின் வெளியீடுகளையும் விவரங்களையும் மட்டும் கொண்டு அதன் தாக்கத்தை மதிப்பிடாமல் அதற்கு மீறியும் உலகளாவிய தரவரிசைப் பட்டியல்கள் அமைய வேண்டும். அவ்வகையில் கல்விக்கு அப்பால் தொழில்துறைகள், சமுதாயம், சமூகங்கள், அரசாங்கம் ஆகியவற்றுடன் இணைந்து ஏற்படுத்தும் தாக்கத்தைக் கொண்டு ஒரு பல்கலைக்கழகத்தின் செயல் திறனை மதிப்பிட வேண்டும் என்று திரு ஓங் கலந்துரையாடலின்போது கூறினார்.




சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹோ டெக் ஹுவா (இடது), கல்வி அமைச்சர் ஓங் யி காங்குடன் (வலது) மாநாட்டில் நடத்திய கலந்துரையாடல். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

தற்போதைய தரவரிசைப் பட்டியல்முறை ஆய்வுக் குறியீடுகளை அதிகம் நம்பியிருப்பதாகவும் அனுபவக்கல்வி போன்றவை புறக்கணிக்கப்படுவதாகவும் உலக நிறுவனங்களின் நிர்வாகிகளும் பல்கலைக்கழகத் தலைவர்களும் கலந்துரையாடலின்போது கூறினர். மாநாடு இன்று நிறைவுறும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.